சொன்னேன். பேரவை முன்னவர் அவர்கள் சொன்னதுமாதிரி 4,5 நாட்கள் விடுமுறை. நானும் இல்லை. பேரவை முன்னவரும் இல்லை. பேரவை முன்னவர் அவர்கள் வந்த புகைவண்டியே தாமதமாக வந்து, அதனால் அஜெண்டாவை இறுதி செய்ய முடியவில்லை. அஜெண்டாவில் சேர்க்காமல் ஒன்றும் கொண்டுவர வேண்டாம் என்பதற்காகத்தான் காலையிலேயே சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவருக்கும் சொன்னேன். சில விதிமுறைகள் இருக்கின்றன. அதன்படிதான் செய்ய முடியும் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, சீரோ ஹவரில் இரங்கல் தீர்மானம் போடுங்கள் என்று கேட்பது முறையல்ல. அவை கூடுகிற அந்த முதல் நேரத்திலே போடுவதுதான் முறை. பேரவை முன்னவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நாளைக்கு அஜெண்டாவில் போட்டு எடுக்கலாம்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

சிந்தாதிரிப்பேட்டை இந்து முன்னணிக் கட்டட குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிந்தாதிரிப்பேட்டை இந்து முன்னணி கட்டிட குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கோரி, திருமதி ஜீனத் சர்புதீன், திரு. கே. செல்வராஜ், திரு. ஆர். சிங்காரம், திரு. இரா. தாமரைக்கனி, திரு. வே. தம்புசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. ப. ரங்கநாதன், திரு. ஜி. பழனிசாமி ஆகியோரிடமிருந்து எனக்கு அறிவிப்புகள் வந்துள்ளன. இது எவ்வாறு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன். திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 14-4-1995 அன்று என்னுடைய தொகுதியிலுள்ள சிந்தாதிரிப்பேட்டையில் அய்யா முதலி தெருவிலுள்ள இந்து முன்னணி அலுவலகத்தில் சுமாராக மாலை 3.45 மணியளவில் குண்டு வெடித்தது. அதில், அந்த குண்டு கொண்டுவந்தவனும் இறந்துவிட்டான். இந்து முன்னணியைச் சார்ந்த பைபிள் சண்முகம் என்பவரும் இறந்துவிட்டார். ஆனால், அது நடந்த உடனே மின்னல் வேகத்தில் மிகத் துரிதமாக, காவலர்கள் வந்தார்கள். அதே நேரத்தி ஃபயர் இன்ஜின் தண்ணீருடன் வந்து அங்கே என்னென்ன மக்களுக்கு செய்ய முடியுமோ அத்தனை ஒத்தாசைகளையும் செய்தார்கள். அந்தச் சம்பவம் நடந்த 8 நிமிடத்திலே

நமது மரியாதைக்குரிய சென்னையின் போலீஸ் கமிஷனர் திரு. இராஜகோபால் அவர்கள் அங்கே சென்று அந்த இடுபாடுகளுக்கிடையே செல்லும்போது, மேலே உள்ள டெபிரிஸ் அவர் தலையிலே விழுந்தது. ஆனால் தெய்வாதீனமாக அவருக்கு காயம் ஏற்படவில்லை. சிறிது நேரத்திலே அந்தப் பதட்டம் எல்லாம் இல்லாமல் மிகச்சாதுர்யமாக, மிக கெட்டிக்காரத்தனமாக அதை நிறைவேற்றியது நம்முடைய நல்ல ஆட்சி. அதுமட்டுமல்ல, எங்கெங்கே 'வல்னரபில் பாயின்ட்ஸ்' இருக்கின்றதோ அங்கேயெல்லாம் போலீசை காவலுக்கு வைத்திருந்தார்கள். காவலுக்கு வைத்ததும் அல்லாமல், எங்கேயெல்லாம் ரோந்து சுற்ற வேண்டுமோ, அங்கேயெல்லாம் ரோந்து சுற்றி வந்தார்கள். போலீஸ் கமிஷனரே சுற்றிக்கொண்டு சென்றார். அதையும் நான் கண்ணால் பார்த்தேன்.

முற்பகல் 11-10

அந்த இடத்திற்கே சென்று பார்த்ததால்தான் சொல்கிறேன். இந்த மாதிரி என்ன நடந்தாலும் உடனடியாக மிக நல்ல முறையில் நடவடிக்கை எடுத்து நம்முடைய தமிழகத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் மிகச் சீராக நடத்திடும் நம்முடைய தர்மதேவதை புரட்சித்தலைவி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த போலீஸ் டிப்பார்ட்மென்ட்டுக்கும் முக்கியமாக போலீஸ் கமிஷனர் திரு. ராஜகோபால் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை அவர்களின் பாதங்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தாதிரிப்பேட்டை இந்து முன்னணி அலுவலகக்கட்டடம் குண்டு வைத்துத் தாக்கப்பட்டதன் விளைவாக தமிழகம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஏறத்தாழ 10 பேர் அளவுக்கு இருப்பார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் கொலை செய்யபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி எங்கு பார்த்தாலும் கடுமையான பதட்ட நிலை ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. இந்த பதட்டநிலை குறித்து யாவருக்கும் வெளியில் கிளம்ப ஒரு அச்ச உணர்வு ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில், ஒரு துயரமான சூழ்நிலையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தாதிரிப்பேட்டையில் இந்து முன்னணி அலுவலகம் சக்தி வாய்ந்த

குண்டுகளைக் கொண்டு தாக்கப்பட்டதால் அந்தக் கட்டடமும் அதிலிருந்த பைபிள் சண்முகமும் மற்றவர்களும் இறந்திருக்கிற துயரமான சம்பவம் தமிழ்நாட்டில் ஏற்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வது போன்று வேறு எந்த மாநிலத்தையும்விட அமைதியான மாநிலம் என்று சொல்லக்கூடிய தமிழகத்தில் இப்படிப்பட்ட துயரமான சம்பவம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னரும் இந்து முன்னணி அலுவலகம் தகர்க்கப்பட்டு 11 பேர்கள் இறந்திருக்கிறார்கள். அதுபற்றிக்கூட நம்முடைய காவல் துறையினரின் புலனாய்வு இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்த இந்து முன்னணி அலுவலகம் தகர்க்கப்பட்ட பின்னால் தமிழகத்தில் கோவை, சென்னை, மதுரை போன்ற இடங்களில் இதைப் பயன்படுத்திக் கொண்டு சில சமூக விரோத சக்திகள் பல கடைகளைச் சூறையாடுகிற நிலையும், பல இடங்களில் சென்று கொண்டிருப்பவர்களை வழிமறித்து அடித்து, துன்புறுத்துகிற, கொலை செய்கிற சம்பவங்களும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று பூராவும் நான் மதுரையில் தான் இருந்தேன். ஒரு சம்பவமும் இல்லை. எனவே நீங்கள் மதுரையைச் சேர்க்காதீர்கள். நானே அங்கே இருந்தேன். வேறு ஊர்களைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் ரகளை நடந்தது என்பதுபோல் சொல்கிறீர்கள். மதுரையில் ஒன்றும் நடக்கவில்லை..

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் நான்கு கொலைகள் நடந்திருக்கின்றன. ஆக இந்த வெடி விபத்து தொடர்பாக 4 உயிர்கள் பலி கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சம்பவங்கள் பட்டப் பகலில் நடக்கின்றன. பொதுவாக ஒரு இந்து முன்னணி அலுவலகம் தகர்க்கப்பட்ட பின்னால் தமிழகத்தில் என்ன சூழ்நிலை ஏற்படும் என்று நம்முடைய காவல் துறையினருக்கு நிச்சயமாகத் தெரியும். பல இடங்களில் பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்த மத நல்லிணக்கத்தைப் பாதுகாக்கக் கூடிய தமிழகத்தில் சில மத உணர்வுகள் மேலோங்கி இரு சமூகத்தினருக்கிடையே சில சம்பவங்கள் ஏற்படுகிற அச்சத்தையூட்டுகிற சூழ்நிலையில் காவல் துறையினர் கண்காணித்திருக்கவேண்டும். பைபிள் சண்முகம் உடல் அடக்கம் செய்கிறபோது, உடலை ஊர்வலமாக எடுத்துச்சென்றபோது பல ஆயிரக்கணக்கான மக்கள் அந்த அனுதாப ஊர்வலத்தில் சென்று இருக்கிறார்கள். இறுதி அடக்கம் செய்கிறபோது காவல்துறையினரும் சென்று இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் நடந்திருக்கிற சம்பவங்கள் துயரமான சம்பவங்களாக நடந்திருக்கின்றன. பல கடைகள் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. மசூதிகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. அதேபோன்று அன்னை மேரியினுடைய சிலைகள் எல்லாம்

தகர்க்கப்பட்டிருக்கின்றன. காவல் துறையினர் என்ன முன்னெச்சரிக்கையோடு நடந்துகொண்டார்கள். ஏன் பந்தோபஸ்து கொடுக்க முடியவில்லை. இப்படிப்பட்ட ஒரு துயரமான சம்பவம் நடந்த பின்னால், அந்த இறுதி ஊர்வலம் நடக்கிறபோதாவது காவல் துறையினர் சூழ்நிலையை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு மாறாக இன்றைக்குக் காவல் துறையினரின் கைகள் கட்டப்பட்டிருக்கின்றனவே, அதற்கு என்ன அடிப்படைக் காரணம்? அதேபோன்று கோவையிலே இதுபோன்ற சம்பவங்கள் (குறுக்கீடு) கோவையிலே இந்து முன்னணியினுடைய (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கெல்லாம் பதில் சொல்வார்கள். உட்காருங்கள்.

முற்பகல் 11-15

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று கோவை நகரத்திலும், இந்து முன்னணியைச் சார்ந்த அதனுடைய ஊழியர் ஒருவர் பால் வியாபாரம் செய்துவிட்டு வருகிறபோது பட்டப்பகலில் அவரை வெட்டி பல சமூக விரோதிகள் கொலை செய்திருக்கிறார்கள். அதேபோன்று இன்னொரு முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவர்களும் இந்தமாதிரி கோரமான கொலைக்கு ஆட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே கொலை கொள்ளை என்பது தொடர்ந்து நடக்கிறது என்று சொன்னால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்த அறிவிப்பின்படி சொல்லுங்கள். இன்னும் இரண்டு, மூன்று சம்பவத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள். தமிழ்நாட்டில் அப்படித் தொடர்ந்து நடக்கிறது என்று சொன்னால், அப்படி நடக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா? இந்த சம்பவத்தைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: ஆகையால், தமிழகத்தில் வாழக்கூடிய மக்கள் அச்சமின்றி வாழவும், வியாபாரிகள், வர்த்தகர்கள், பொது மக்கள், வெளியூர் பயணம் செய்கிறவர்கள் அச்சமின்றி தமிழகத்தில் நடமாடுவதற்கு காவல் துறையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உஷார் படுத்தவேண்டுமென்றும், இன்றைக்கு காவல் துறையினுடைய கண்காணிப்பு என்பது செயல் இழந்து போய் இருக்கிறது. அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14-4-1995-ஆம் தேதி சிந்தாதிரிப்பேட்டைக்கு அருகே இந்து முன்னணி

அலுவலகத்தில் சில சதிகாரர்கள் வெடிகுண்டு வைத்து தகர்த்து, அதில் இரண்டு பேர் உயிரிழந்து இருக்கிறார்கள். தமிழகம் அமைதிப் பூங்காவாக இருப்பது சில அரசியல்வாதிகளுக்கு, சில பேர்களுக்கு பிடிக்கவில்லை. அரசியல்வாதிகளுடைய சூழ்ச்சி காரணமாகவும், அரசியல் ஆதாயம் தேடுவதற்கும் இந்த முயற்சி நடந்திருக்குமோ என்று பொது மக்கள் மத்தியிலே ஒரு பீதி ஏற்படும் வண்ணம் நடைபெற்று இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் வெளிநாட்டினுடைய உளவாளிகளின் தொடர்பு இருக்குமோ என்று கருதி, சி.பி.ஐ. போலீஸ் விசாரணை நடத்தவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இது பாராட்டத் தகுந்ததாகும். ஆகவே வெளிநாட்டுச் சதிகாரர்களால் ஏற்கெனவே நமது இந்தியாவில் பம்பாய், டெல்லி போன்ற இடங்களிலும் இந்தமாதிரி வெடிகுண்டு விபத்துக்கள் நடந்தன. மத்திய அரசின் கவனக்குறைவு, அசால்டின் காரணமாகத்தான் இந்த மாதிரி தொடர்ந்து வெடிகுண்டு விபத்துக்கள் நடக்கின்றன. ஆனால் பம்பாயில் நடந்த வெடிகுண்டு விபத்துக்குக் காரணமான சதிகாரர்களை கண்டுபிடிக்காத காரணத்தால்தான் இப்போது தொடர்ந்து நடக்கிறது. இதற்கு காரணம் மத்திய அரசுதான் என்று தமிழக மக்கள் ரொம்பவும் பீதி அடைந்துள்ளார்கள். ஆகவே இது சம்பந்தமாக நான் என்ன சொல்கிறேன் என்றால், மாநில சோதனைச் சாவடிகளில், மாவட்ட சோதனைச் சாவடிகளில் வெடிகுண்டு சோதனைக் கருவி வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். தமிழக அரசு காவலர் ஒவ்வொருவருக்கும் ஒரு லத்தி கம்பு கொடுத்திருப்பதைப் போல வெடிகுண்டு சோதனைக் கருவியும் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல் ஏற்கெனவே வெடிகுண்டு தயார் செய்வதற்கு சில மூலப்பொருட்கள் தமிழகத்திலும் சரி, இந்தியாவிலும் சரி - தடை செய்வதற்கு வேண்டிய, அதாவது எந்த நோக்கத்தில் அவர் தயார் செய்ய வாங்கிக்கொண்டு போகிறார்களோ அதைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள்– சமூக விரோதச் செயலுக்கு அது பயன்படுவதைத் தடைசெய்ய வேண்டும். ஒரு சாதாரண நிகழ்வை இந்து முன்னணியில் கலவரம் உண்டாகும் வண்ணம் சில பத்திரிக்கைகள் திருத்தி வெளியிடுகிறார்கள். ஆகவே, அதுவெல்லாம் மத்திய அரசு தமிழகப் பிரச்சினை என்று கருதாமல், இந்தியப் பிரச்சினை என்று கருதி அதிலே சென்சார் செய்து, வெளியிட ஆவன செய்யவேண்டும். இது சம்பந்தமாக சில அரசியல்வாதிகள் சதியில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்கள் யார் யார் என்று கண்டுபிடித்து ஒரு நீதி விசாரணை வைத்து அந்த சதியைச் செய்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இது குறித்து மேலும் நிறைய பேசவேண்டியிருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கூறி விடைபெறுகின்றேன். வணக்கம்.

1995 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* *மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14-4-1995 அன்று மாலை 3.55 மணி அளவில் சென்னை சிந்தாதிரிப்பேட்டை, ஐயா முதலித் தெருவில் அமைந்துள்ள இந்து முன்னணி மாநில அலுவலகத்தில் ஒரு சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்துள்ளது. இந்த அலுவலகம் அந்தக் கட்டிடத்தில் 29-3-1995 அன்று முதல் செயல்பட்டு வருவதாகத் தெரிகிறது. மிகக் குறுகிய சாலையில் 12 அடி அகலத்தில் அமைந்துள்ள கட்டிடம் இது. வெடிகுண்டு வெடித்ததால் இக்கட்டிடத்தின் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் தகர்ந்துள்ளன. இக்கட்டிடத்தை ஒட்டினாற்போல அமைந்துள்ள வீடுகளுக்கும் எதிர்புறம் உள்ள ஒரு வீட்டிற்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. இந்தத் துயரச் சம்பவத்தில் இடிபாடுகளுக்கு இடையே சிக்கி, திரு. பைபிள் சண்முகம் என்பவர் மரணம் அடைந்துள்ளார்.

முற்பகல் 11-20

இந்தச் சம்பவத்தில் மரணம் அடைந்த, அடையாளம் தெரியாத இன்னொருவரின் பிரேதம், எதிர்வீட்டு மாடியில் விழுந்து கிடந்துள்ளது. அடையாளம் தெரியாத இந்த நபர், வெடிகுண்டு வைத்த சதி வேலையில் ஈடுபட்டவராக இருக்கலாம் என்று காவல் துறையினர் சந்தேகப்படுகின்றனர். இந்தச் சம்பவம் நடந்த செய்தி அறிந்தவுடன், சென்னை காவல் துறை ஆணையாளர், காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் காவலர்கள், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றுள்ளனர். இடிந்து விழுந்த கட்டிடத்தின் இடிபாடுகளை அகற்றும் பணியில் தீயணைப்புப் படையினரும் ஈடுபடுத்தப்பட்டனர். கைரேகை நிபுணர்கள் பிரிவு, வெடிகுண்டு கண்டுபிடிப்புப் பிரிவு, மற்றும் துப்பறியும் நாய்கள் இவ்வழக்கில் புலன் விசாரணையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்த திரு. பாலமுருகன் என்பவருக்கு அரசு மருத்துமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சைக்குப் பிறகு, அவரது தந்தையின் கட்டாயத்தின் பேரில், அவர் மருத்துவமனையிலிருந்து வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். எனது சார்பில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்களும், சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டார்கள்.

இந்த வெடிகுண்டு சம்பவம் தொடர்பாக, சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 581/95-ல் இந்திய வெடிபொருள் சட்டம் பிரிவு

9 (b) (1) (a), படைக்கலன்கள் சட்டம் பிரிவு 25 (1-B) (a), இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 302, 436 மற்றும் 506 (ii) ஆகியவற்றின் கீழ், வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு பின்னர் குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு, அதாவது CB-CID-க்கு மாற்றம் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் தன்மையைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள், மாநில அளவில் மட்டுமல்லாமல் பல்வேறு மாநிலங்களில் இயங்குபவர்களாகவும், அல்லது பல்வேறு மாநிலங்களில் இயங்குகின்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கக்கூடும் என்று, காவல் துறையினர் சந்தேகப்படுவதால், தமிழக அரசு இந்த வழக்கை மத்திய புலனாய்வுத் துறைக்கு, அதாவது CBI-க்கு, மேல் விசாரணைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. 1993 ஆம் ஆண்டு சென்னை R.S.S. அலுவலகக் கட்டிடத்தில் வெடிகுண்டு வெடித்தது தொடர்பான வழக்கின் தன்மையைக் கருத்தில் கொண்டு, அந்த வழக்கும் CBI-யிடம் ஒப்படைக்கப்பட்டது.

மாநில அரசே இந்த வழக்கை CBI-யிடம் ஒப்படைப்பதற்குக் காரணம், இந்த வழக்கை மாநில அரசே புலன் விசாரணை செய்ய முடியாது என்ற காரணத்தால் அல்ல. இந்த வழக்கில் ஈடுபட்டவர்கள் பல்வேறு மாநிலங்களில் செயல்படுபவர்கள் என்று சந்தேகப்படுவதாலும், வெடிகுண்டு வெடித்த நிகழ்ச்சி என்பதாலும், இந்த வழக்கு CBI-க்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாநில அரசும், தமிழகக் காவல் துறையும் இந்தப் பணியை மேற்கொள்ள இயலாத காரணத்தினாலோ அல்லது சிலர் போகிற போக்கில் கூறிச் சென்ற கருத்துக்களுக்கு மதிப்பளித்தோ மாநில அரசு எடுத்த முடிவு என்று எவரும் கருதக் கூடாது என்பதைத் தெளிவுப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

பயங்கரவாதம் என்பது ஜனநாயகத்தின் முதல் எதிரியாகும். அது எந்த இடத்தில், எந்த ரூபத்தில் தலையைக் காட்டினாலும், அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய கடமை ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அனைவருக்கும் உண்டு. மனமாச்சரியங்களையும், கருத்து வேறுபாடுகளையும், வன்முறை மூலமாக நிச்சயமாகத் தீர்த்து வைக்க முடியாது. அவ்வாறு தீர்வு காண நினைப்பது, காட்டுமிராண்டித்தனம் மட்டுமல்லாமல், மனித குலத்திற்கே இழிவு தரக்கூடிய செயலாகும். எனவேதான் எல்லாத் தரப்புகளிலிருந்தும் இந்த வெடிகுண்டுச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளனர். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலும், இந்த வன்முறை நிகழ்ச்சிக்கு எனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத நல்லிணக்கத்திற்கும், பொது அமைதிக்கும் பல நூற்றாண்டுகளாக தமிழக மக்கள் எடுத்துக்காட்டாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பது வரலாறு காட்டுகின்ற ஒரு பேருண்மை ஆகும். எனவேதான் மனமாச்சரியங்களும், கருத்து வேறுபாடுகளும் நிலவி வந்தாலும், அவை எந்த நேரத்திலும் இத்தகைய இழி நிலைக்குச் சென்றதில்லை; இது நமக்கு புதிய பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகிறது என்றாலும், அவற்றை எதிர்கொள்ள தமிழக அரசும், காவல் துறையும் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்டிக்கத்தக்க இந்த வெடிகுண்டு சம்பவமும், அதைத் தொடர்ந்து சிலர் உணர்ச்சி வசப்பட்டதால் நடைபெற்ற சில வன்முறைச் சம்பவங்களும், அதனால் ஏற்பட்ட உயிர்ச் சேதமும், பொருட் சேதமும், உண்மையில் வருந்தத்தக்கவையாகும். இத்தகைய நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது நம் அனைவரின் கடமை ஆகும்.

முற்பகல் 11-25

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர், தமிழக அரசும், காவல் துறையும் எடுத்து வருகிற நடவடிக்கைகள் குறித்து குறைபட்டுக்கொண்டார்கள். பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்கத் தவறி விட்டோம் என்ற தோரணையில் குற்றம் சாட்டியுள்ளார்கள். காவல் துறையினர் விரைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட காரணத்தினால்தான், வன்முறைச் சம்பவங்கள் பரவாமல் தடுக்கப்பட்டன. காவல் துறையினர் எல்லா இடங்களிலும் பாதுகாப்புப் பணிகளை முடுக்கி விட்டுள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும், மதத் தலைவர்களையும், முக்கிய பிரமுகர்களையும் அழைத்து, அம்மாவட்டங்களில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். இதுவரை நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள்மீது, காவல் துறையினர் வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர். சில வழக்குகளில் குற்றவாளிகளையும் கைது செய்துள்ளார்கள். இந்த வழக்குகள்மீது தகுந்த புலன் விசாரணை மேற்கொண்டு, குற்றவாளிகளைக் கைது செய்ய, தகுந்த மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து மதங்களையும் சார்ந்த வழிபாட்டுக் கூடங்களுக்கும், ஆலயங்களுக்கும், சில கட்டிடங்களுக்கும் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதையும், வன்முறைச் சம்பவங்கள் பரவாமல் தடுக்க, காவல் துறையினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டபடி, எந்த மசூதியும் தீ வைத்துக் கொளுத்தப்படவில்லை; கடைகளும் சூறையாடப்படவில்லை. சில கடைகளை மூடும்படி சிலர் வற்புறுத்தியிருக்கிறார்கள். சில கடைக்காரர்களும் தாங்களாகவே வன்முறைக்குப் பயந்து, வன்முறை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக, தாங்களாகவே கடைகளை இழுத்து மூடியிருக்கிறார்கள். காவல் துறையினர், full alert-இல் இருக்கிறார்கள். மிகவும் எச்சரிக்கையாக, மிகவும் கவனமாக நிலைமைகளைக் கண்காணித்து வருகிறார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலையில், மத உணர்வுகள் மேலோங்கி வரக்கூடிய ஒரு சூழ்நிலையில், தகுந்த நடவடிக்கைகள் எடுக்காமல் இருந்திருந்தால், தமிழகத்தில் வன்முறை நிகழ்ச்சிகள் மிகவும் பெரிய அளவில் நடைபெற்றிருக்கும், வன்முறை தலைவிரித்தாடி இருக்கும். அவற்றையெல்லாம் நிகழவிடாமல், காவல் துறையினர் நிலைமையைத் திறமையாகச் சமாளித்து, கட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ஏதோ குற்றச்சாட்டுக்களைக் கூற வேண்டும் என்பதற்காகப் போகிற போக்கில், மாண்புமிகு உறுப்பினர்கள், இத்தகைய குற்றச்சாட்டுக்களைக் கூறக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்தகைய ஒரு பொதுப் பிரச்சினை ஏற்படும்போது, அனைத்துக் கட்சிகளும் தங்கள் மனமாச்சரியங்களை மறந்து, பொது அமைதி நிலவுவதற்கும், பொதுமக்களின் உயிரையும், உடைமைகளையும் பாதுகாப்பதற்கும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அதை விடுத்து இருக்கின்ற பிரச்சினைகளை அதிகப்படுத்துகின்ற வண்ணம், சிலர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும், விடுக்கின்ற அறைகூவல்களும் மிகவும் தவறான முன்னோடிகளாக அமைந்துவிடும் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். தமிழகத்திற்கே உரித்தான பொது அமைதிப் பாரம்பரியமும், மத நல்லிணக்க உணர்வும் தமிழகத்தில் என்றென்றும் நிலைத்திடும் வண்ணம் நமது செயல்பாடுகள் அமைய வேண்டும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொண்டு, இதற்கு இந்த அரசு எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது ஆதரவை நல்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதால், எல்லாப் பகுதிகளிலும் சகஜ நிலைமை தற்போது நிலவி வருவதால், இப்பிரச்சினை குறித்து மேலும் விவாதிக்க, இப்பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

1995 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தெளிவான விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு

(அ) கோவையில் சில பகுதிகளில் மின்தடை ஏற்படுவதைத் தடுக்க புதிய டிரான்ஸ்பார்மர்கள் நிறுவ வேண்டியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. செல்வராஜ் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கோவை மாநகராட்சிக்குட்பட்ட ஆர். எஸ். புரம் வைசியர் வீதி, தடாளம் ரோடு, பெரிய கடைவீதி, ராஜவீதி போன்ற பகுதிகளில் மின்தடை ஏற்படுவதைத் தடுக்க புதிய டிரான்ஸ்பார்மர்கள் நிறுவ வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

கோவை மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.எஸ்.புரம் வைசியர் வீதி, பெரியகடை வீதி, ராஜவீதி போன்ற பகுதிகளில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக ஏற்கனவே ஒவ்வொன்றும் 250 கே.வி.ஏ. கொள்திறன் கொண்ட மூன்று புதிய மின்மாற்றிகள் 1994ஆம் ஆண்டிலேயே நிறுவப்பட்டுள்ளன. இது தவிர தடாளம் ரோடு பகுதியில் இருந்த 100 கே.வி.ஏ. கொள்கிறன் கொண்ட மின் மாற்றிக்கு பதிலாக அதிகக் கொள்திறன் கொண்ட 150 கே.வி.ஏ. மின்மாற்றி நிறுவப்பட்டு 1994-ஆம் ஆண்டிலிருந்து இயக்கத்தில் உள்ளது. இம்மின்மாற்றிகள் நிறுவப்பட்ட பின்னர், மேற்கண்ட பகுதிகளில் மின்தடை ஏதும் இல்லாமல், மின்சாரம் சீராக வழங்கப்பட்டு வருகிறது.